நெஸ்லே லங்கா பீஎல்சி செய்தி வெளியீடு
கொழும்பு: 29 செப்டெம்பர் 2016

## நெஸ்லே நிறுவனம், 'Kiri Govi Diriya' என்ற பாற்பண்ணையாளர்களின் மேம்பாட்டிற்கான திட்டத்தை ஆரம்பித்துள்ளது

*3,000 இற்கும் மேற்பட்ட பாற்பண்ணையாளர்கள் நெஸ்லே நிறுவனத்திடமிருந்து பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்*

உலகளாவில் தனது 150 ஆண்டுகள் பூர்த்தியையும், உள்நாட்டில் தனது 110 ஆண்டுகள் பூர்த்தியையும் கொண்டாடும் முகமாக, நெஸ்லே நிறுவனம் ஆரம்பித்துள்ள 'Kiri Govi Diriya' என்ற பாற்பண்ணையாளர்களின் மேம்பாட்டிற்கான திட்டத்தின் மூலம் இலங்கையிலுள்ள 3,000 பாற்பண்ணையாளர்கள், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் மிகச் சிறந்த நடைமுறைகள் தொடர்பில் கற்றறிந்து, உயர் தரத்திலான பாலை இன்னும் அதிகமான அளவில் உற்பத்தி செய்யும் வகையில் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான உதவிகளைப் பெற்றுப் பயனடையவுள்ளனர்.

நெஸ்லே நிறுவனம் தனது கொண்டாட்டங்களை அனுட்டிக்கும் முகமாக உள்நாட்டு சமூகத்தித்திற்கு அது வழங்கவுள்ள பல்வேறு பொது அர்ப்பணிப்புச் செயற்திட்டங்களில் முதலாவது செயற்திட்டமாக இந்த பாலுற்பத்தி மேம்பாட்டுச் செயற்திட்டம் அமைந்துள்ளது. அனுராதபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வொன்றில் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சரான கௌரவ பீ. ஹரிசன் அவர்கள் கலந்து சிறப்பித்து, 'Kiri Govi Diriya' செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக 3,000 பாற்பண்ணையாளர்களுக்கு 150 பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் அர்ப்பணிக்கப்படவுள்ளதுடன், அவர்களில் 150 பேருக்கும் தமது வியாபாரத்தை மேம்படுத்த உதவுவதற்காக அத்தியாவசியமான பால் கறவை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் இது தொடர்பாக குறிப்பிடுகையில், "இலங்கையில் பாலுற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது எப்போதும் நெஸ்லே நிறுவனத்தின் பிரதான சிந்தனைகளுள் ஒன்றாக காணப்படுகின்றது. இந்த நாட்டில் எமது பயணத்தில் பாரிய அங்கம் வகித்துவந்துள்ள எமது உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுக்கு இந்த ஆண்டில் எமது அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டை நாம் மீளவும் உறுதிப்படுத்த விரும்புகின்றோம். இந்த விசேடமான, அர்ப்பணிப்புடனான ஈடுபாடுகள் நாம் அன்றாடம் ஒன்றிணைந்து பணியாற்றுகின்ற பாற்பண்ணையாளர்களின் வாழ்வில் சிறந்த பலனை ஏற்படுத்தி, உள்நாட்டு பாலுற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்யும் எமது முயற்சிகளை வலுப்படுத்தி, இத்தொழிற்துறை சுபீட்சமடைவதற்கு பங்களித்து, இறுதியில் எமது பாற்பண்ணையாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும்."

இலங்கையில் பாலுற்பத்தித் தொழிற்துறையானது இன்னமும் வளர்ச்சிகாணும் நிலையில் காணப்படுவதுடன், உள்நாட்டு பாலுற்பத்தியானது மொத்த சந்தையின் கேள்வியை ஈடுசெய்ய போதுமானதாக இல்லை. ஆகவே இத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு 1980 களின் ஆரம்பத்திலிருந்தே நெஸ்லே நிறுவனம் உரிய அதிகார சபைகளுடன் நெருக்கமாக இணைந்து தனது பணிகளை முன்னெடுத்து வந்துள்ளது. பாலின் விநியோகம் மற்றும் தரத்தை அதிகரிப்பது மட்டுமன்றி, உள்நாட்டு பாற்பண்ணையாளர்கள் நிலைபேற்றியல் கொண்ட வாழ்வாதாரத்தை வழங்கவேண்டும் என்ற நம்பிக்கையுடனும் நெஸ்லே நிறுவனம் தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

பால் சேகரிப்பு மையங்கள் மற்றும் பாலை குளிரூட்டி பதப்படுத்திப் பேணும் நிலையங்கள் போன்ற மிக முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவியுள்ளமைக்குப் புறம்பாக, கால்நடைத் தீவனமிடல் மற்றும் சினைப்படுத்தல், கால்நடை சுகாதாரம் மற்றும் பண்ணையை நிர்வகித்தல் அடங்கலாக பல்வேறுபட்ட தொழில்நுட்ப விடயங்கள் சார்பான மிகச் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்கும் வகையில் பாற்பண்ணையாளர்களுக்கு பயிற்சி மற்றும் மேம்பாட்டு செயற்திட்டங்களையும் நெஸ்லே நிறுவனம் ஏற்பாடு செய்து வருகின்றது. பாற்பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கு நிதியுதவிகளை வழங்குதல், அதிக பால் கறக்கும் பசுக்களை இனப்பெருக்கம் செய்வதற்காக செயற்கைமுறை சினைப்படுத்தலை ஊக்குவித்தல் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து நடமாடும் கால்நடை சிகிச்சை முகாம்களுக்கு அனுசரணையளித்தல் போன்ற உதவிகளையும் நெஸ்லே நிறுவனம் வழங்கி வருகின்றது.

இலங்கையில் தற்போது தனியார்துறை மத்தியில் அதிகளவான புத்தம்புதிய பாலைச் சேகரித்துவருகின்ற நிறுவனமாக நெஸ்லே திகழ்ந்து வருவதுடன், உள்நாட்டில் பெறப்பட்ட புத்தம்புதிய பாலை உபயோகித்து உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு உற்பத்திகளை நுகர்வோருக்கு வழங்குவதுடன், கிட்டத்தட்ட 20,000 பாற்பண்ணையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு பாதுகாப்பான வாழ்வாதாரத்தை வழங்கி, உள்நாட்டு சமூகங்கள் முன்னேற்றமும், வளர்ச்சியும் காண்பதற்கு உதவி வருகின்றது. 2015 ஆம் ஆண்டில்

புத்தம்புதிய பாலைக் கொள்வனவு செய்துள்ளதன் மூலமாக உள்நாட்டு பாலுற்பத்தித் தொழிற்துறைக்கு ரூபா 3.6 பில்லியன் தொகையை நெஸ்லே நிறுவனம் பங்களிப்புச் செய்துள்ளது.